செ.வெ.எண் 466

நாள் 24-7-2007

# பத்திரிகை செய்தி

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இன்று (24.07.2007) காலை 11.00 மணியளவில் தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகையில் நான்காவது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் சென்னையிலுள்ள அனைத்து மண்டல உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் உதவி ஆணையர்களின் பணியில் முன்னேற்றம் தொடர்பாக ஆய்வு செய்தார்கள். ஆய்வின்போது, பொது மக்களுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட இனங்களில் 15.09.2007க்குள் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார். குடும்ப அட்டைகளில் முகவரி மாற்றம், பெயர் நீக்கம் மற்றும் புதியதாக பெயர் சேர்த்தல் மற்றும் குடும்ப அட்டைகளுக்கான மண்டல மற்றும் மாவட்ட மாற்றுச் சான்று வழங்குதல் போன்றவற்றிற்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் அனைத்துப் பணிகளையும் நிறைவேற்ற வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்கள். மேலும், அனைத்து அலுவலர்களும் பொது மக்களிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் உரிய நேரத்தில் அலுவலகப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். இது தவிர, இந்த அலுவலகங்களில் தேவைப்படும் வசதிகளை மேம்படுத்தவும் போதிய பணியாளர்களை நியமிக்கவும் ஆலோசனை வழங்கினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் செயலாளர் திரு. எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முதன்மை ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திரு.எல். என். விஜயராகவன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் திரு. எஸ். சந்திரமோகன், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

வெளியீடு:- இயக்குநர், செ.ம.தொ, சென்னை-9